142

உ

கடவுள் துணை.

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
10 JUL 1912
MADRAS



திருத்தணிகை

# தியானக் கீர்த்தனங்கள்.

இவை

இராயபுரம் மகாவித்துவான்

ஸ்ரீமத். அ. ச. ஜெகராஜ முதலியாரவர்கள்

மாணாக்கருளொருவரும்,

இராணிப்பேட்டை

ம-௱-௱-ஸ்ரீ சொப்பையப்பமூர்த்தி அவர்கள்

செல்வ புத்திரருமாகிய

ஸ்ரீமான் இ. சொ. து. வேலாயுதபண்டிதர்

அவர்களாலியற்றப்பெற்று

நண்பர்கள் பலருடைய வேண்டுகோட்படி

பிரசுரஞ்செய்யப்பட்டன.

---

பூலோகவியாசன் பிரஸ்

சென்னை.

20-4-1912

விலை] [அணா 2.

Q26:417
N12

இந்நூலாசிரியரின் ஆசிரியர் இராயபுரம் மகாவித்வான்

# A. S. ஜெகராவு முதலியாரவர்கள் இயற்றிய

# சிறப்புப்பாயிரம்.

நிலமண்டில வாசிரியப்பா.

பொன்வளர் நெடுவரை புறவெயி லெனச்சூழ்
முன்வளர் கிடங்குபால் வாரிதி கடுத்துத்
தேவர்கோ னகரஞ் சிறந்தில தெனநினை இ
யாவருங் களிப்பா னணிநிழன் முதல்வளங்
கொண்டோங் கியசீர்க் கொற்றவெண் பதாகை
பண்டோங் கியமணிப் பருக்கோ புரமுடை
மருத்தணி கைச்சால் வயங்கெழு மால்தபு
திருத்தணிகைப்படைத் திறற்படை யுழவன்
வெஞ்சூர்க் கடிந்தருள் வேலாயுதவன்
செஞ்சே வடிக்கெனத் தென்னிலங் கைக்கோன்
சிந்தையு மெய்யுந் திகைப்பவின் னிசைமரிஇ
சந்தமுந் தாளமுந் தழீஇய நிலைமையுஞ்
சொற்சுவை பொருட்சுவை தோன்று மெச்சுவையும்
நற்சுவை யறிஞர் நாடுறூஉம் நடையுங்
கேட்போர்க் கினிப்புங் கிளந்தோர் களிப்பும்
வேட்போர் வியப்பும் விளைவித் தணியடை
இம்மை யம்மைவீ டெனமறை யியம்பும்
மும்மையுந் தருபயன் முறையுடைத் தாய
சிங்காப் புதிய சங்கீர்த் தனமா
மங்கா நறுமண மலராற் றொடுத்த
மாலையும் பொன்மணி மாலையும் புரையக்
காலையும் மாலையுங் கனிய வியற்றினன்
மணியின் வயிரமும் வள்ளவிற் குமணனும்
அணியின்மாங் கல்யமும் அமைவுறு வென்னப்
பாணிப் பேர்நிலப் பன்னக ரினுமுயர்
ராணிப் பேட்டையா நற்றலத் துறைவோன்
அருந்தமிழ்த் தொப்பை யப்ப மூர்த்திமால்
பெருந்தவத் தெழுந்த பெய்முகி லனையான்
சந்திரன் சுமந்த சடையணி பரமச்
சுந்தரன் கமலத் துணையடி மறவான்
ஆயிர முடியுடை யனந்தனே ருருவாப்
பாயிரம் டரப்பப் பார்மிசை வருநேர்
மாலா யுதம்பெறு மதனெழி லுடைமை
வேலா யுதனென விளங்குமா வலனே.

# சாற்றுக் கவிகள்.

சென்னைக் கிறிஸ்டியன்காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டிதரும்
உரையாசிரியரும், சைவப்பிரசாரணருமாகிய

## ஸ்ரீமந். ஈக்காடு-இரத்தினவேலு முதலியாரவர்கள்

கூறிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

செல்லாருந் தடவையிரா ணிப்பேட்டைத் தொப்பையப்ப மூர்த்தி சேயாய்
நல்லான்ற நூலுணர்வே லாயுதபண் டிதனென்னும் நாவ லோன்றன்
கல்லாத நலக்கமுறு தணிகைமலைக் குகன்சீர்த்தி கவின வோங்கப்
பல்லாரு மகங்களித்துச் சிறந்துளக்கக் கீர்த்தனங்கள் பகர்ந்தான் மாதோ.

---

ஷை ஈக்காடு-இரத்தினவேலு முதலியார் ஜேஷ்டகுமாரர்
சென்னை மகா வித்துவான்

## ஈகை-இரத்தினசபாபதி முதலியா ரவர்கள்

இயற்றியது.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நற்றிருத் தணிகை யுறைதரு குமர நாயக னளினமெல் லடியி
லுற்றிடு மன்பாற் கீர்த்தனைத் துதிக ளுசிதமா யுரைத்தனன் சிறப்பு
பெற்றிடு மிராணிப் பேட்டையிற் றொப்பை யப்பமூர்த் தியின்றவப் பேறும்
வெற்றிசேர் மகன்வே லாயுதப் பெயர்கொள் வித்தகஞ் செறிந்தநா வலனே.

நேரிசை வெண்பா.

தொப்பையப்ப மூர்த்தித் திணைவன் றணிகைக்குத்
தொப்பையப்ப மூர்த்தி சுதனருகும்—ஒப்பையகல்
வேலா யுதபண் டிதன்கீர்த் தனைவிரித்தான்
வேலா யுதனருளை வேட்டு.

---

பிருங்காசைலம் அத்வைத சமாஜத்தலைவர்

## ஸ்ரீமான்-வீ· பாலதேசிக நாயனாரவர்கள் கூறிய

கலித்துறை.

காவினிக் குந்தணி காசலன் செய்ய கழல்களுக்கு
மாவினிக் குந்தகை வேலா யுதமூர்த்தி மற்றமைத்த
பாவினிக் குந்தமிழ்ப் பண்பமர் கீர்த்தனம் பாடுநர்தம்
[illegible]னிக் குங்கலை ஞானஞ் சிறக்குமெந் நாவையுமே.

சமாசபாஷிய ஸித்தாந்தம் திவ்யகவி

## திருமயிலை-ஸ்ரீராகவ தாஸரவர்கள் கூறியது.

விண்ணேறுந் திருத்தணிகை வரையரசை யன்பர்தொழ வேண்டு மன்பிற்
கண்ணேறும் படியருளுஞ் சண்முகனைப் பற்சந்தங் கதிக்கும் நுத்ய
பண்ணேறுங் கீர்த்தனங்கள் பரிவலங்கா ரங்களுறப் பாடி ஞானத்
திண்ணேறுங் கலைவேலா யுதமூர்த்தி தமிழ்வளமை செப்பற் பாற்றே.

---

இரங்கூன் வித்வாபிமான சங்கத்து அக்கிராசனாதிபதி

வித்தாரகவிப் புலவர்

## புரசை-ஸ்ரீமான். வீ. ஏ. சிங்காரவேலு பிள்ளையவர்கள்

கூறியது.

கன்னயகீர்த் தனவணியின் னிசைவேட்டுஞ் செவிக்கினிமை நயக்கு மாறு
மன்னியவே லாயுதபண் டிதன் தணிகை வருகுமரன் மலர்ப்பூந் தாட்குத்
துன்னியசெந் தமிழ்மலர்கொண் டொருமாலை ஈனியுவப்பச் சூட்டி ஞானப்
பன்னலங்கொண் டிவன்கீர்த்தி ஞாயிறென நாற்றிசையும் பரவ மாதோ.

---

இரங்கோன் வித்வாபிமான சங்கத்தாரு ளொருவரும்

திருநெல்வேலி பிரகாசபுரம்

ஸ்ரீலஸ்ரீ P. ஜோசேப்பு நாடாரவர்கள் பிரதம மாணாக்கரும்

சென்னை பெத்துநாயகன்பேட்டை ஜோதிஷாருட

கணிதவல்லுநர்

ஸ்ரீமத். ஆ. நயனப்பப் பண்டிதரவர்கள்

பிரதமப் புதல்வருமாகிய

மகாமதுரகவிப் புலவர்

Q26:47
N12

## ஸ்ரீமத். கபாலமூர்த்திப் பிள்ளையவர்கள் கூறியது

நிதமூர்த்தி சரங்கண்டு சேவிக்கு மடியார்க்கு
நீடு ஞான
விதமூர்த்தி கரமளிக்குந் திருத்தணிகை யருமருந்தை
வித்வ வேலா
யுதமூர்த்திக் கிளர்கீர்த்த னங்கொடுபா டிடுமடியா
ரும்பர் காணும்
பதமூர்த்தி கரமுறுவ ரெனில்யாமிங் கிசைப்பதென்ன
பாவல் லோரே.

சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்

## பூவை - கலியாணசுந்தர முதலியாரவர்கள்

இயற்றியது.

நற்றவத்தர் புகழ்தணிகை யம்பதிவாழ் பெம்மானை நாடி ஞான
முற்றுநரன் னவரசசங் கீதமலி கீர்த்தனங்கள் முறையாச் சொற்றான்
செற்றமிலாச் சுககுணத்தன் றொப்பையப்ப னுங்கோமான் செய்த வத்தால்
பெற்றவே லாயுதபண் டிதனாக வேவதியும் பிரபலோனே.

---

சென்னைப் "பூலோகவியாஸன்" பத்திராதிபர்

சோடச அவதானம்

## ஸ்ரீலஸ்ரீ பூஞ்சோலை-முத்துவீர நாவலரவர்கள்

கூறியது.

வானிருக்கு மதியிருக்கு மொருசடில னுமைபயந்த வடிவே லத்தன்
மீனிருக்கும் விழியிருக்கும் வள்ளிதெய்வ யானைமகிழ் விமலன் போதிற்
றானிருக்கத் தமிழிறக்கித் திருத்தணிகை கீர்த்தனப்பா சாற்றி னான்செந்
தேனிருக்குஞ் சுவையிறக்க வேலாயு தப்புலவன் சிறப்புற் றம்மா.

---

பண்டிதசிரோமணி ஆயுர்வேத ரத்தினாகரம்

மாதுஸ்ரீ மனோன்மணி யம்மாள்

மாணவி

## ஸ்ரீமதி - அகிலாண்டநாயகி யம்மாள்

இயற்றியது.

பொன்மலியு மேருவந்தன் சிரங்குனிக்குந் திருத்தணிகைப் புண்ணியற்குச்
சொன்மலியுங் கருணைரச னணிமலியக் கீர்த்தனங்கள் சொற்றா னன்கு [றல்
கன்மலியு முயர்தோளான் றொப்பையப்ப வேட்புனிதன் கருணைத் தோன்
தென்மலியும் வேலாயு தப்பண்டி தப்பேர்நற் றிறமை யோனே.



உ

சிவமயம்.

ஸ்ரீ திருத்தணிகை சுப்பிரமண்யர்

# கியானக்கீர்த்தனம்.

## கணேசர் வணக்கம்.

நேரிசைவெண்பா.

பாரார் முகவொளியும் பைந்தாட் கரவேலும்
தாரார் திருத்தணிகை சண்முகன்மேல்-பேராரும்
செஞ்சொற்சேர் கீர்த்தனங்கள் செப்பவே வாக்கருளத்
தஞ்சங் கணபதிநற் றுள்.

## சிவபெருமான் வணக்கம்.

நேரிசைவெண்பா.

கண்மூன் றுடையாய் கரத்தில் மழுவுடையாய்
விண்மூன் றலகேத்து வித்தகனே-நன்மூன்
றணிவளரும் பொற்றணிகை ஆறுமுகன் கீதப்
பணிவளர நின்கடைக்கண் பார்.

## மகாவிஷ்ணு வணக்கம்.

தேவாரம்.

சீர்பெறுஞ் சிலைகை யேந்துஞ் சீதர னடியைப் போற்றி
தேர்பெறுந் தணிகை மேவும் செங்கல்வ ராய வள்ளல்
வார்பெறுங் கீர்த்த னங்கள் வழிப்பட வகுத்திட் டேனல்
பார்பெறு முலகோர் நல்ல பதவியை யடையத் தானே.

## சிவசங்கரி வணக்கம்.

நேரிசைவெண்பா.

மலையரச ஞேன்பால் மகளெனவே வந்து
பலகலைதேர் பார்வதியே பண்பாய்-மலைத்தணிகை
மேவுமொரு செங்கல்வன் மெய்ப்பேரால் கீர்த்தனங்கள்
பாவினத்திற் செய்பதயை பண்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 10 JUL 1912 MADRAS

## வாணிதேவி வணக்கம்.

நேரிசைவெண்பா.

கம்பர்கவி வாணரொடு காளமே கப்புலவர்
நம்புதமிழ் வாணிவரம் நல்குமே-இம்பர்
திருத்தணிகை வீற்றிருக்குஞ் செங்கல்வ ராயன்
கருத்தணியுங் கீர்த்தனஞ்சொல் கால்.

## அறுபத்துமூவர் வணக்கம்.

நேரிசைவெண்பா.

தணிகைவளர் செவ்வேள் தயைபரன் மேற்கீர்த்
தனைபதிக நாவிசைத்துச் சாற்ற-அணிகை
அறுபா னெருமூன் றடியா ரடியை
உருகிசென்னி வைப்பே னுவந்து.

## அவையடக்கம்.

கட்டளைக்கலித்துறை.

சீரார் தணிகையிற் செங்கல்வ ராயன் திருவடிக்கே
பாராருங் கீர்த்தனப் பாமாலை சொல்லிப் பணிந்திடவே
தாராரும் வித்துவ சிங்கங்கள் பல்பிழை சார்ந்திடினும்
வாரார் குதலை மொழியெனப் பாலித்து வாசிப்பரே.

---

## ஸ்ரீ சுப்ரமண்யர் தியானக்கீர்த்தனங்கள்.

இராகம்-அமீர்கல்யாணி — தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேலவ னைநிதம் தேடி வினைய கலுமெப் போதும்

அநுபல்லவி.

ஞாலந்துதி திருத்தணிகை வளர் நாதனைச் சிவ சுப்ரமண்ய
தாளைச் சிரஞ்சூட்டி பக்தியூட்டி சரணம்சரணமெனப்போற்றி.()

வேதவொளியைக் காட்டும் வேதமுறையை யூட்டும்
சாதனையாகவேநம்பினேன்காலைசமையமிது சேவசண்முகதேவா. ()

பக்தர் தொழுவது யோக்யம் பாணி நடப்பது சிலாக்யம்
யுக்தியறிவது வாக்யம் ஓமென் றுல்வரும் ஞான பாக்யம். ()

வீணில்தொழுவது வெட்கம் வேசி நாடுவது தூக்கம்
காணிபொன்பெண்ணாசைநோக்கம் காசினிதூஷிக்கும்கபட வக்க
[ம்
வேதமுடிவினி லாடும் வேலாயுதன் பாடல் தேடும்
காதல் மிகவே நாடும் கலைக்கான மனமே சேரும்

இராகம்-கமாஸ் ரூபகதாளம்

பல்லவி.

காணகாண கண்கள் போதாதே கதிர் வேல்முருகனே

அநுபல்லவி.

வானவர் புகழும் அடியார் போற்றும்
வாழுந்திருத் தணிகை யுற்றும் (கா)

சரணங்கள்.

தத்தரிகிட ஜெம்தரிகிட தாஹுதரி தில்லாஹு
தகததகத ஜெனதத்திமி தத்தோமென மயிலேறவே கா

தாரணி தனிலே பிறந்து தைபல் மோகமே கிடந்து
வாரிதிதனிலே யமைந்து வரனே நின்னடியில்வந்து-கா

ஆசபாச மென்னுந் தாரம் ஐஞ்ஞான வறிவே கோரம்
பூசனை செய்வதே நேரம் போற்றுவதுநீதிசாரம்-கா

பத்திவை ராக்கிய திரம் பார்க்குள் ஞானமே வீரம்
அத்தனே காண்பதேசூரம் ஆதரிப்பதுன் பாரம்-கா

மூர்த்திவே லாயுதன் பாட மூவர்க ளொன்றுய்க் கூட
சாத்திர-வேதந் தேட சண்முக னருள் நீட(கா)

இராகம்-பைரவி ரூபகதாளம்.

பல்லவி.

வேலவ னென்றுசொன்னல் வினையறுக்கும் முத்திக் கொடுக்கும்
வீணுய்த் திரியாதே மனதே.

சரணங்கள்

காலன் வாராமல் தள்ளும் கைவல்லிய ஞானங் கொள்ளும்
வேலவர் நாமமே சொல்லும் வேண்டுவர்க்கேக்ருபை நல்கும்-வே

பொய்யாய்விளைக்கும்பாசம் அதில்பொருந்தியிருப்பதேதோஷம்
கைவிடவே மோசம் காப்பதென் குருவின் நேசம் - வே

சதிகுறை யாலே நொந்து தவிக்கின்றேன் விரகா வெந்து
மதிகுறை யில்லாமல் வேலா மனங்களித்து வருவாய்நேரா -வே

விண்ணின் மின்னற்போ ருென்று வீழ்ந்துவிடு உடல்பொய்யே
எண்ணினேன் வேலாயுதமூர்த்தி ஏழைக்கருள்செய்வாய் பூர்த்தி

இராகம்-நாதநாமக்கிரி பல்லவி. ரூபகதாளம்.

சண்முக வேலா சங்கரன் பாலா
சமைய மிதெனையாளாய் தர்மானு கூலா
சமைய மிதெனையாளாய் தர்மானு கூலா (ச)

அநுபல்லவி.

உன்னையல் லாக்கதி    யுற்ற துணையில்லை
என் துயர் போக்க    வியலா தென்னதொல்லை
என் துயர் போக்க    வியலா தென்னதொல்லை (ச)

ஆசபாச மென்னும்    ஐம்புல காயம்
மோச மாம்நீர்க்    குமிழ்போ லதிசாயம்
மோச மாம்நீர்க்    குமிழ்போ லுதுசாயம் (ச)

மைந்தர் மனைவிதரு    மாயாவுப சாரம்
தன்னில் தவிக்காமற்    றுள்மலர் பாரம்
தன்னில் தவிக்காமற்    றுள்மலர் பாரம் (ச)

இல்லாமையென்னுஞ்சாபம் விருந்தாலல்லவோ கோபம்
மல்லாடு தேதாவி.    மரணநோய் பாவம்
மல்லாடு தேதாவி    மரணநோய் பாவம் (ச)

ஞால மீதிற்சொன்னேன்    நயப்படவென்னை
வேலா யுதமூர்த்தி    வேண்டினே னுன்னை
வேலா யுதமூர்த்தி    வேண்டினே னுன்னை (ச)

---

இராகம்-பூபாளம்-அல்லது-மோகனம்    ஆதிதாளம்.

பல்லவி.

என்ன சொகுசு    இவ்வுடல்தவசு
மின்னார் படுங்குழியில்    வீழ்கின்றபவிசு

அநுபல்லவி.

நன்னுதல் வள்ளி பங்காள    யோகனே
கன்மத்து ளாழ்ந்து வீணே கலங்கின்றேன் த்யாகனே (எ)

குழவி பிராயத்தில்    கூசாமற் செய்யுதே
குழல்நரைத்து யாக்கை    கோலூன்றி வாடுதே (எ)

நாயினுங் கடைகெட்ட    நானென் செய்குவேன்
தாயாய் பரிந்து சேயன்    சஞ்சலந் தனைபோக்கேன் (எ)

தேவர் முனிவர் தொழுந்    தேவாதி தேவனே
ஆவலா யடியார் தேடும்    அற்புத நாதனே (எ)

காலா பன்னிருகரமூலா    தணிகை வளர்
வேலா யுதமூர்த்தி நாவினின்    னுரைகிளர் (எ)

---

இராகம்-செஞ்சுருட்டி    பல்லவி.    ரூபகதாளம்.

சிவசண்முக வேலனைக்கண்டு சேவித்திடுவாய் மனதே.

அநுபல்லவி.

தவமேவிய முனிவர்துதி தடஞ்சூழ்திருத் தணிகை மாபதி

சரணங்கள்.

துக்க சுகத்தை யடைந்தேன்-நல்ல
துறவறத்தை மறந்தேன்
பக்குவ மற்றுக் கிடந்தேன்
பாவிக்குட் பாவியானேன் (சிவ)

ஆகமமறை வேதமோதேன்-பெரு
அஞ்ஞானவலைதனக்குள்ளானேன்
சோகமான துயர்க்குள் ளானேன்
தொல்லுலகில் சூத ரானேன் (சிவ)

தந்தை தாயும் நீயே-சர்வ
சமரட்சணையும் நீயே
சிந்தை குணங் குடியு நீயே
சிறந்து எனை யாள்வாய் நீயே (சிவ)

தாசன் வேலாயுத மூர்த்தி-பொல்லா
சஞ்ச லந்துறந் தேத்தி
பாச சுகத்தில் சேர்த்தி
பக்குவஞ் செய்வதோ நேர்த்தி (சிவ)

இராகம்-ஜாவளி-அல்லது-தோடி ஆதிதாளம்.

பல்லவி.

கதிர்வே லையனே கலிதீர்த்தாள் மெய்யனே

சரணங்கள்.

சதிகுறை யாலே மனநொந்த தாலே
சுவாமி யுன்பால் வந்த தாலே
இதுவேளை வந்தருள் (கதி)

சஞ்சலங் கொண்டு வஞ்சியர் தொண்டு
சரச வுல்லாசத்தில் விண்டு
வழிகண்டு வந்தருள் கதி

அசுரர்சம் மாரா அமரர்க்கு பேரா
ஆதரித் திடுங்குருபாலா அன்டர் கூலா-வந்தருள் கதி

வேல்முரு காதணி நாள்சொல்லு மோமணி
வேண்டி வேண்டி மனம் நாடி யுனைத்தேடி-வந்தருள் கதி

வேதங்கள் போற்ற நாதங்கள் தேற்ற
வேலாயுத மூர்த்தி நாட்ட கவிபூட்ட-வந்தருள் கதி

இராகம்-சுருட்டி ரூபகதாளம்.

பல்லவி.

ஆதரமே நீயேகதி திருத்தணி-ஆண்டவனே பொன்மணி

அநுபல்லவி.

பாதார விந்தமல்லால் பாவிக்கு வேறுளதோ
படுந்துய ரறியாமற் பார்க்க மனதுளதோ

சரணங்கள்

ஐந்துவகை யாற்கொண்ட அன்பை நினைந்துருமல்
ஆசைபாசத்திலுறை அறிவினைச் சுட்டருமல் ஆத

கந்தனே யுனைப்பாடி காலங்க ழித்தி டாமல்
கைவல்லிய நவநீதங் காணேன் தெரிந்தி டாமல் ஆத

வஞ்சகர் நேசமே வைத்தாயறி வில்லா
வார்த்தைக் காளாகவே கெடுத்தாய் நெறி யல்லாச் ஆத

சஞ்சல மனத்தையுந் தொடுத்தாய் தர்ம மல்லாத்
தாரணி மீதினில் தவிப்பதே சரியல்லால் ஆத

என்றன் குலதெய்வ மென்று உனைக் கெஞ்ச
இரக்கமி ராமலே இருந்தா லிது கொஞ்சம் ஆத

மைந்தன்வே லாயுதன் மூர்த்திக்கு இது பஞ்சம்
மையூர வாகனு மலரடியே தஞ்சம் ஆத

---

இராகம் பியாகடை ரூபக தாளம்.

பல்லவி.

வேலவனே க்ருபைத் தாரும் சுவாமி
வேண்டினேன் வந் தாளிந்நேரம்.

அநுபல்லவி.

மாலயன் முனிவோர்கள் தொழு
மையா துய்யா வேல்முரு கையா வேல

சரணங்கள்,

பக்தர் துதிபரி பூரண வுருவே-ஞான
பாக்யமறை யானந்த திருக் குருவே
பக்தணி வனென்று படுந்துயர் நீக்க
பாரமோ நேரமோ பாதுகாக்க) (வேல

மாதர் வலைக்குட்பட் டேஞ்ச லாடி-தினம்
மயங்கியே யுடல் கெட்டு நொந்து வாடி
ஆதார நீயென்றே கரஞ்சிரஞ் சூடி
ஆதிநீதி ஜோதி யுனைத்தேடி (வேல)

எத்தனை தரஞ்சொல்லி குறைமுடிப்பேன்-இனி
யாதொன்றுஞ் சொல்லாதிருந் தாலுயிர் விடுப்பேன்
பெற்றவளறிவாள் பிள்ளை படுங்கோரம்
பேசாம லிருந்தா லிதுவோ சாரம் (வேல)

வேதவே தாந்த விண்கோவே மூர்த்தி
வேலாயுதன் றுதி பூசைக் கருள்பரந் தேவே
சாதனை யாயுனை நம்பினேன் காவே,
சமையச் சமையம் இதுவே வேளை (வேல)

---

இராகம்-கமாஸ் அடதாளம்.

பல்லவி.

உனைவிட துணையிலையா வேல்முரு கையா

அநுபல்லவி.

அடியார்க் கடியேனையா வேல்முரு கையா உனை

சரணங்கள்.

விண்ணவர் தொழுமீசா வேல்மயூர வாசா
ஏழை யடிமையுன்னையா வேல்முருகையா உனை

சின்னஞ் சிறியபேதை சிறுமை படவே வேதை
சிற்ற முனக்கேனையா வேல்முரு கையா உனை

பக்தர்தேடும் பொற்றாளா பாரமுனக் கோவேலா
பட்சம் வைத்தெனை யாளையா வேல்முருகையா உனை

பக்தனென் றுன்க்ருபை பாலிக்கா விடிலுயிர்
பாவிநான் விடுவேனையா வேல்முருகையா உனை

பூதலமீதினில் சொன்னேன் புலவன்வேலாயுதன்
வேதனை யாவும்போக் கைய்யா வேல்முருகையா உனை

---

இராகம்-ஜாவளி காபி-அடதாளம்.

பல்லவி.

மயில்மீ தேறி வந்தருள்வாய் மவுன தேசிகா

அநுபல்லவி.

வையகம்புகழ்த் தணிகை வளர் வள்ளி நாயகா

சரணங்கள்.

ஊசிகண்ட காந்தத்தைப்போ லென்று மடிமை
வேசி தொண்டு செய்திடாமல் விதிக்கக் கடமை மயி

நெக்குநெக் குருகி நெஞ்சம் நெறிதள் ளாடுதே
பக்குவ பொன்றறி யாமலுடல் பதைக்க வாடுதே மயி

எத்தனைநாள் செல்லுமோ வுன்னிணையடி தருக
நித்தமும் வெங்கலியால் பஞ்சை நினைவு கருக மயி

குன்றுருக வேல்தொடுத்த குமர நாயகா
நன்றோ நாயின் கோரம் நாட்டில் தேசிகா மயி

வேலவனே ஞாலமீதில் வேண்டி நின்றிட
பாலன் வேலாயுதன்பா பக்தி தோன்றிட மயி

---

இராகம்-பியாகு ஏகதாளம்.

பல்லவி.

இந்த மட்டு முலகினில் ஜென்மம்எடுத்ததும்போதும்
யான் படுந்துயர் நீக்கும்

அநுபல்லவி.

கந்த மலர்மேவுஞ் சுந்தர தணிகை
காந்தி குறவள்ளி மெய்யனே-அன்பர்
சிந்தை குடிவாழுந் துய்யனே முருகையனே இந்த

சரணங்கள்.

வாரிதி தன்னில் வலைவீசி பிடிக்க
மாரன் கணைமிகத் தொடுக்கப்-பொல்லா
நாரியர்க ளெனைக் கெடுக்கா அதைத்தடுக்க-இந்த

அத்வைத மென்னு மானந்த நற்சபை
அத்தனை நிதமும் போற்றும் நல்ல
அகத்தில் அறிவை சாற்றும் மலர் தூற்றும் இந்த

வேலாயுதன் துதி விமல நாதனே
வேல்மயூர - வேதனே யெனைக்
கோலஞ் செய்யா தேனையனே மலர்கையனே. இந்த

இராகம் காம்போதி சாப்புதாளம்.

பல்லவி.

இன்னம் பாராமுக மேனோ முருகையனே
என்னை யாள்வ துனக்கென்ன கோபமோ சொல்லாய்

அநுபல்லவி.

தேன்பாயுங் கிரிசூழுஞ் சோலைவயல் மணக்கும்
சுந்தரத் திருத்தணி சுகுண செங்கல்வ ராஜா

சரணங்கள்.

கல்லாத முழுமூட கசடனு னாலும்
காப்பதுன் பாரம் காங்கையனே இந்நேரம்
நல்லார் நேசமுற்று நாடி யிருந்தாலும்
நலமொன்றுங் காண்கிலேன் நாயமோ வெனக்கோதும்
நாடி நாடி யுனைத்தேடி நிதமுருகி
வாடி வாடி யுடல்வதையுற நின்றேனே இன்ன

ஆறு குழவியாக அமலன் சிவநாதன்
அன்னை யேஸ்வரிக் கனுக்கிர கஞ்செய்திட
கூறு விதமதாய் கொண்டிரு கரந்தூக்க
ஆறுமுக மாயுரு வொன்றான வையனே
அடியன் படுங்கோர மிடியைத் தீர்த்திட
நடிக்கு மயில்மேல் முடிக்க வருகுவாய் இன்ன

தேவர் முனிவர்கள் அல்லல் தீர்க்க சூரனைச்
சிதைவுற சம்மாரஞ் செய்திட்ட மாதேவா
வேதமு றைப்படி விண்ணுல கரசாண்டாய்
வேலா யுதமூர்த்தி வேண்டினேன் தொண்டாய்
வேதனே மாமறை யோதிடு நாதனே
நீதனே போதனே கமல்பொற் பாதனே இன்ன

---

இராகம் அட்டாணு ரூபகதாளம்.

பல்லவி.

ஏனோ இன்னமுந் தாமதம் சும்மா
விருக்க வுனக்கு முறுக்கோ செருக்கோ

அநுபல்லவி.

வானோர் மகிழ்சுப்ர தீபா வாதோ என்மீது
மற்றேதோ வறிகிலேன்

சரணங்கள்.

சித்தங் கலங்கியே மெத்தவும் வாடாமல்
நிரா கில்விழுந்து தாவிக்கெடாமல்-திரு
பக்தர்தொழுமுன்றன் பாதாரவிந்தமே
பாலிக்க நின்னருள் ஆதார மல்லாமல்-இனி
வித்தைகள் பலவும் சித்திக்க வென்றனை
வேதவேதாந்தனே வேலவனே தணி
பக்தனிவனென்று பட்சம்வைத்தே-நற்
பாக்ய யோக்கிய வாக்கிய நல்குவாய் ஏனோ

ஆசை யெனும்பஞ்ச யாக்கை நிலையென்று
அறியாமலே மோசஞ்செய்தே-கொடும்
வேசியர் நிட்சைக்குட் சீஷனாய் தொண்டுகள்
வேண்டியே துதித்து நின்றே-பொல்லா
ஞாசினி யேசிட மோச விதிதனைக்
கண்டுகொர்வித்து பரதவித்து நின்று
யோசனை கொள்ளாமற் பூசனை மறந்தேன்
உன்பார மல்லவோ கண்பாரு மையனே ஏனோ

உன்னையே நம்பினேன் கர்ம வினைநீக்க
உற்ற துணையில்லை மெய்யா ஈன்ற
அன்னை தந்தையர்வும் சுற்றமும் நீதக்க
அப்பனே வேல்முருகையா
நன்னய மாகவே நின்னருள் வாய்த்திட
நாள்செல்லு மோர்குறை வேர்செல்லு மோ
முன்னை நாள் அவ்வைக்கோர் கனியீந்தாய்
மூர்த்திவேலர்யுதன் கவிக்குகந் தாள்வாய் ஏனோ

---

இராகம் பியாகு அடதாளம்

பல்லவி.

குருநாதா வீணை நாடினேனே-யுனை
விடேன் விடே னினி நானே

சரணங்கள்.

குருதந்தை நீயல்லால் குமராவென் பேரில்லா
கோபமோ கைவிட மல்லா சுவாமி
கோபமோ கைவிட மல்லா சுவாமி குரு

மரகத மயிலேறி மாங்கனிக் காய் கூட
மாநில வந்த திரு வொளி
மாநில வந்த திரு வொளி — குரு

அநுதின முனைக்கூடி அன்பர் மனமுநாடி
ஆசைப்பெருக்கு தையா தேடி சுவாமி
ஆசைப்பெருக்கு தையா தேடி சுவாமி — குரு

சைதந்நிய அத்வைதச் சத்துசித் தாநந்த
தத்துவ மோங்கிட க்ருபை யோத சுவாமி
தத்துவ மோங்கிட க்ருபை யோத சுவாமி — குரு

அஞ்ச லஞ்ச லென்றுன் அடிகமலங் கெஞ்சு
ஆதரிக்கா தென்ன நெஞ்சம் சுவாமி
ஆதரிக்கா தென்ன நெஞ்சம் சுவாமி — குரு

வேலாயுத ஞேதும் விளங்குங் கவி போதும்
வேண்டு வற்கே மனநீதம் சுவாமி
வேண்டு வற்கே மனநீதம் சுவாமி — குரு

---

கட்டளைக்கலித்துறை.

வருவாய் திருவருள் பாலிக்க வன்பர் மனங்களிக்க
தருவாய்நின் சேவை சமயமீ தென்னயான் தாங்கவொண்ணுக்
கருவாய் பிணிபல சூரியன் காண்பனி காட்சியைப்போல்
குருவாய் மயின்மீ தெழுந்தரு ளாயென் குலதெய்வமே.

இராகம் ஆரபி. — தாளம் ஆதி.

பல்லவி.

வருவா யுன்னருள் தருவாய் முருகனே

அநுபல்லவி.

திருமலைத் தணிகைவாழ் செங்கல்வ ராயனே
தேஜோன் மயாநந்த சச்சிதா நந்தனே

சரணங்கள்.

பாத சிலம்பு ஜொலிக்க ஜொலிக்க
பண்ணவர் மண்ணவர் கரஞ்சிரங் குவிக்க
மாதவர் தபஜப மந்திரம் ஜெபிக்க
மயில்மீ தேறியெங்கும் மாநில நடிக்க
பாதகரீ வசுரர் குலமதை யடிக்கப்
பூண்புடன் தேவர்கள் பேரிகை முடிக்க — வருவா

கின்னரகிம் புருட ரொருபுற மிருக்க
கீத வாத்தியர்கள் சங்கீதந் தொனிக்க
மன்னர்கு ழாங்கள் மலர்ப்பதந் துதிக்க
மகிழ்வுடன் நாரதர் தம்பூர் தெரிக்க
அன்ன வாகனன் அரிமகிழ் மிக்க
அரனுமை யாசீர் வதிக்க வருவா

அத்வைத பக்த சமாஜ நீட
அடியவர் பஜனை பிள்ளைகள் பாட
பக்தன்வே லாயுத மூர்த்தி தேட
மட்சமு டன்பெரி யோர்கள் நாட
நித்தமுங் கடைத்தேற கடைக்கண் ணோட
நின்னருள் பூசிக்க மனதினில் கூட வருவா

---

இராகம் காம்போதி இந்துஸ்தான். ஆதிதாளம்.

பல்லவி.

கதியீதருள் புரிதிருத் தணிவேலனே

அநுபல்லவி.

கதிவேறிலே யுனைமிக கெஞ்சி பணிந்தேன்

சரணங்கள்.

எழுகுன் றுருக இருடிகள் தேக்க
எம்பிரான் ஜலமெ டுக்க கதி

கதலிகள் நாட்டி பந்தல்கள் சூட்டி
கரமதில் வேல் பூட்டி கதி

தேவர்கள் போற்ற அரக்கரை வாட்ட
திருமுடி சிரஞ் சூட்ட கதி

வேதங்கள் திறக்க ஞானங்க ளுரைக்க
வேலா யுதன்பா ஜொலிக்க கதி

---

இராகம் பிலகரி துப்புதாளம்,

பல்லவி.

மயில்வாகனனே பூமனே வந்தருள்

அநுபல்லவி.

மயில்மீ தேறிய சீலனே வள்ளி நாயகி லோலனே
மூலனே காலனே யனுகூலனே சரவண பவனே மயில்

93
12-232

சரணங்கள்.

அசுரர் சம்மார யோகனே யாறுமுகனே
அசுரர் குலநாசனே அதிகவிதரண ரூபனே
ஐயனே முருகையனே துய்யனே த்யாகபோகனே மயில்

தினகர தேஜஸ் கந்தனே ஆறு முகனே
தீனதயாளனே திருமலர்ப் பொற்பாதனே
சித்தனே முத்தனே நித்தனே சிவாக்கிய பாலனே மயில்

எத்தனை ஜாலஞ் செய்கிறாய் எளியன்மேல்
சித்தமென்ன சிலையோ கல்லோ சொல்வதுகேழ்ப்பதிலையோ
நித்தமும் வேலாயுதன் மூர்த்திக் கருள் செய்சுத்தனே, மயில்

---

இராகம் ஜாவளி தோடி. சாப்பு தாளம்.

பல்லவி.

சிந்தையொன் றுதரக் கோடிவந்தனங்கள் செய்குவேன்

அநுபல்லவி.

வந்தனங்கள் செய்குவேன் வாழ்த்திதொண்ட ராகவே

சரணங்கள்.

எங்குநிறை கின்றநீதா எவ்வுயிர்க்கு ளாடும்வேதா
துங்கமயின்மீ தேறும்தூய சேவற்கொடி நாதா சிந்

சங்கரர்க்குபதேசம் சாற்றியஓம் பிரணவவேலா
மங்கைவள்ளி நாயகா வந்தருள்வாய் முருகா சிந்.

உண்டுஉடை பூண்டாலும் ஊத்தை சடலமிது
கண்டு களிப்ப தெல்லாங் கடைவழிக்கு மாகாது சிந்.

ஞானக் கடலைத் தாண்டி நாயகா வுனைவேண்டி
மோன மௌனமோதி மொழிதற் காகா நாடி சிந்

வேலா யுதன்மூர்த்தி விரைந்து உனைக்கூவ
காவலா இந்நேரங் கலிதீர்க்க மேவிவர சிந்.

---

இராகம் இங்கிலீஷ்டியின் பல்லவி. சங்கராபரணம்.

ஓம்சரவண பவனே மங்களம்
உம்பர்கள்குகனே ஓம் ஓம்

அநுபல்லவி.

காம்பீர்ய முள்ள கங்கை மைந்தனேகந்தனே ஜெப மங்களம்

சரணங்கள்.

வள்ளிமணவாளா கதிர்வேல் கொண்ட சேவகா
புள்ளிமயில் மிசைவருஞ் சிவ புண்யனே மங்களம் ஓம்

சூரசம் மாரனே சுத்தப்பரி பூரணனே
தாரணியோர் புகழ்ந்தேத்து மையனே சந்தத மங்களமே ஓம்

பக்தி கொடுப்பவனே நிதம் பாலித் தருள்வோனே
பக்திதி யானபஜனை செய்திடும் பாலரைக் காப்பவனே ஓம்

சிவனருளிய பாலா தெய்வானை மணவாளா
தவமுனிவர் தொழுஞ் சாமி நாதனே தாளிணைக் ஷேமங்களம் ஓம்

வேத துந்துமி முழக்க விண்ணவர் புஷ்பமாரி துளிக்க
பாததா மரைதுதிக்க வேலாயுதப் பாலனை யாள்பவனே ஓம்

## வாழி-விருத்தம்.

சீரிலகு சிவசுப்ர மண்யன் வாழி
ஜெகம்புகழு மைங்கரமும் செழித்து வாழி
ஆரியதோர் நான்மறைக ளந்தம் வாழி
யரவணிந்த மூர்த்திமா வரியும் வாழி
பாரினிலே பஜனைசெய்யும் பாலர் வாழி
பஞானந் தெரிந்தசுத்தர் பக்தர் வாழி
மாரியென நின்கருணை பெருகி வாழி
மாநிலமும் மங்காமல் வாழி மாதோ.

உ

சிவமயம்.

# சிவசமயக் கீர்த்தனங்கள்.

---

விருத்தம்.

செங்கதிரோன் றனைக்காணுக் கஞ்சம் வாமே
செயல்போலுஞ் சேயன்யான் சிந்தை நொந்து
பங்கயொடு வனந்தமுறை முகமும் நாண
பாரின்மிசை புன்சொல்லாற் பட்டேன் கேட்டேன்.
இங்கிதுநின் செயலல்லால் திக்கு காணேன்
ஈசனே யெனதுகலி தீர்ப்ப தென்றோ
மங்கையிட பாகம்வைத்த மழுமா னேந்த்ரா
வந்தருள்வாய் விடையேறி மகிழத் தானே.

இராகம் ஜர்வளி செஞ்சுருட்டி. ரூபகதாளம்

பல்லவி.

விடைமீ தேறிவந் தருள்வாய் விமலநாதனே
நாதனே சதுர்வேதனே குருபாதனே க்ருபைபோதனே.

சரணங்கள்.

இரவி கா்ணுப் பங்கயம்போ லேங்குதே நெஞ்சம்
நெஞ்சம் இதுபஞ்சம் உனைகெஞ்சும அருள்தஞ்சம் விடை

சங்கரா கங்காதரனே சத்தி சூலனே
சூலனே மன்றகூலனே யென்னையாளனே பொற்றுளனே விடை

நவமா முப்புர மெரித்த நம்பனே காராய்
காராய் துயர்தீராய் கண்பாராய் ஓடிவாராய் விடை

தில்லைமூ வர்ப்ரவர் தெரிசிக்குந் தேவே
தேவே யெனைக்காவே அருள் கோவே விடை

வேலாயுத னைமிக்க வேண்டிப் போற்றிட
போற்றிட மலர்தூற்றிட கரங்கூப்பிடப் பதம்நாட்டிட விடை

---

இராகம் சுருட்டி ஜாவளி. ஆதி தாளம்.

பல்லவி.

நாரிபாகனே வாராய் நாயனைக்கண் பாராய்
வீரிய ஞானேசுரா விமலா தற்பரா பரா

சரணங்கள்.

காமனை யெரித்த காலா கங்கைதரித்த மூலா
சோமனை யணிந்த மூலா சொர்ண மணிதயை ஞாலா   நாரி

மூலாதாரப் பொருளே முத்திக்கு முதல்வோனே
ஆருதாரத் தொளியே ஆண்டவனே தாண்டவனே   நாரி

அரியயனுந் தேட அண்ணல்நடு மலையாய்நீட
பரியை நரியாய்விட பாம்பு புலி யுயிர்த்துபாட   நாரி

ஆழித் தரும்பெண்ணைப் பின்னும் அலையசெய்யாதே இன்னம்
நாழியாகுது சின்னம் நாயின் படுங்கோரந் திண்ணம்   நாரி

அத்வைத பக்த ரோங்க அமலாவுன்னருள் தாங்க
நித்தமு ஞான மோங்க நினைவாயுன் கழல் துங்க   நாரி

வேதாந்த மூர்த்தியே வேண்டுவர்க்கே கீர்த்தியே
வேலாயுத மூர்த்தியே வினைதீர நேர்த்தியே   நாரி

---

இராகம் அசாவேரி.   ரூபக தாளம்.

பல்லவி.

இன்னமு மன மிரங்கிடாதோ
ஏழை யடியோர்க்கருள் செய்யாதோ

அநுபல்லவி.

மன்றாளாடிய மங்கை பாகனே
மனதிலெந் நாளும் மதிக்க மறைகள் மிகதுதிக்க   இன்ன

சரணங்கள்.

வான்புவிக்கு மெங்கும் நின்ற ஜோதியே
வானவர் கொண்டாடும் நீதியே
மான்மழு சூலந்தரித்த லோலனே
ஐயனே துய்யனே மெய்யனே கைய்யனே   இன்ன

மரலிதனை யுதைத்தவா
மதனைதீயா லெரித்தவா
மார்க்கண்ட முனி பூசைக் குகந்தவா
வாகனே யோகனே தியாக நடேசனே   இன்ன

பத்தர் சித்தர் முனிநித்தந் துதித்திட
பாரிலுள வோரைப்பாது காத்திட
பக்தி தியான முத்தி சேர்ந்திட
பத்தனே சித்தனே முத்தனே கர்த்தனே   இன்ன

வேலனைப் பயந்தவா வேதநாலைக் கரந்தவா
பாலன் வேலாயுதன்
மூர்த்திக் கிரங்குவாய்
பாச விசுவாச நடராஜனே போஜனே இன்ன

இராகம் பைரவி சாப்புதாளம்.

பல்லவி.

சங்கரீ உன்சேவை தாராதென்ன வர்மமோ

அநுபல்லவி.

கங்கை சடைதுலங்க மங்கைபாகம் விளங்க
இங்குவந்தா ளையனே ஐயனே ஐயனே சங்க

சரணங்கள்.

நவமா முப்புரமதை நகைத்து எரித்தஆதிப்
பவமாமிவ் வாழ்க்கை யோட்டுமே யோட்டுமே யோட்டுமே. சங்க

தீங்கு புரித்தபரா தவிக்கின்றே னிதுவாதா
வந்தருள் புரிததியே ததியே ததியே சங்க

சஞ்சலங் கோரமதில் தாழவென் னுலாமோ
பஞ்சை மெலிந்து வாடுறேன வாடுறேன் வாடுறேன் சங்க

ஐந்து வகையாம் யாக்கை அனியாய மான போக்கை
சிந்தை யறிவைப்போக்குதே போக்குதே போக்குதே சங்க

மூர்த்தி வேலாயுதன் மொழிகவிக் கேயிரங்கி
கீர்த்திசெய் திடப்பாருமே பாருமே பாருமே. சங்க

இராகம் தோடி திரிபுடை தாளம்.

பல்லவி.

அருள் புரிவாய் நிதம் வருவாய்

அநுபல்லவி.

அருணஜ லேசா அருமறை வாசா அருள்

சரணங்கள்.

வேதாந்த கீர்த்தி விண்ணுலகை நேர்த்தி
பாதாம்புஜஞ் சேர்த்தி பணிந்திட மூர்த்தி அருள்

மார்க்கண்டன் தொழ மறலிவிழ
தருணம்வா அரனே விடேன் அருள்

புரமெரித்தாய் புரணி தரித்தாய்
பருகியல் போர்த்தாய் பரகதி சேர்த்தாய் அருள்

வேதாந்த கீர்த்தி வேலாயுத மூர்த்தி
பாதந்தொழுதே தேதி பரலோகம் வாழ்த்தி. அருள்

இராகம் நாதநாமகிரிகை ரூபக தாளம்.

பல்லவி

சந்திர சேகரா சம்போசத்திமனோ கரா சிவா

அநுபல்லவி.

சுந்தரஞ் சேர் தில்லை மேவும் சுகுணபஞ் சாட்சரா ஹரா

சரணங்கள்.

நித்தமுனை பக்தர் சிந்தித்து வந்திக்கும்
நிஷ்கலங் காரனே நிதஞ் சந்திக்கும்
சத்துசித்தா வெங்கும் நிர்த்தமிடுந் துங்க
தேஜோன்மயா நந்தம் தேவே யுன்னருள் தஞ்சம் சந்த

முக்கண்ணன் தக்கன்மேல் மூண்ட கோபத்தினால்
உக்கிர வீரத்தால் உம்பரோ ரடித்தல்
சக்கர பாணிமால் சண்டைசெய் வந்ததால்
சங்கர வாட்டநாள் சரகரம் பூந்ததால் சந்த

கல்லாத வஞ்சனை மல்லாடு தேபிணி
பொல்லாத பாதகஞ் சொல்லாம லேயினி
எல்லாநின் செயலே கற்கண்டு நற்கனி
வெல்லவென் னுலாமோ தொல்லுலகில் மணி சந்த

மூர்த்திவே லாயுதன் கீர்த்தனை செய்திட
நேர்த்தியாய் அத்வைத பக்த்தா ளோங்கிட
கீர்த்தியாய் வேதப் புராணங்கள் தேடிட
கின்னரர் கிம்புருடர் கீதங்கள் பாடிட. சந்த

இராகம்-கமாஸ் ஆதிதாளம்.

பல்லவி.

ஜெகவின் புரக்குஞ் சோதி அதைத் தெரிந்தவர்க் கேநீதி

அநுபல்லவி.

சகல லோக காரண விநோதன்
சமைய சமையந் தாண்டிடு நாதன்

சரணங்கள்.

அதிரூப சுகுண வெசப்பார தீரன்
அனந்த வுயிர்க்குள் வாடுஞ் சூரன்
சதிருறை யாவும் தடைக்குஞ் சீரன்
சதுர் வேத சமுதல் தாண்டிடு பூரன் ஜெக

சித்தர் முத்தர் தெரிசிக்கும் நிர்த்தன்
தேவாதி தேவன் தினகர வேதன்
முத்திக்கு மேலான் முருகசெந் தாளன்
ஓதவெ வர்க்கும் முடியாத கியாதன் ஜெக

எங்குநி றைந்தருள் ஏகவை போகன்
எளியவர் பூசிக்கும் எம்பிரான் த்யாகன்
துங்கசு காதித சுப்பிரவொய் யாரன்
துறவறத் துக்குமேலா துய்மை ஞானகோலன் ஜெக

வேலாயு தன்பா விளங்கிடக் கீர்த்தி
வேண்டி துதிக்கும் அத்வைத பக்தி
ஞால மீதினிலே யோங்கிடப் பூர்த்தி
ஞான வான்க ளறிவிலுறை மூர்த்தி, ஜெக

---

இராகம் சுருட்டி ஜாவளி ஆதிதாளம்.

பல்லவி.

என் மனமதுருகியுனைத் தேட
மஹாதேவா கடைக்கண் நாட

அநுபல்லவி.

சின்னஞ் சிறியேன் சிந்தனைப் படயான்
ஜன்மித்த விதியோ தெரிந்திடவறியேன்
தேவாவுன் னருள்குறியேன்

சரணங்கள்.

சைதந்ய யோகனே சமையகாரணனே
அத்வைத போகனே அடிமையின் த்யாகனே
ஓம் ஆதியே சோதியே என்

சத்திய சொருபனே தாண்டவ ராயனே
முத்திக்கு சுத்தனே மவுன தேசிகனே
உனைத் தொழுதே னையனே ஓம் என்

நித்திய பூரணனே நிமல காரணனே
சுத்த நிறைஞ்சன சுபகுண யோகனே
சித்தனே முத்தனே ஓம் என்

அன்பின் குருவே ஆனந்த வுருவே
கன்னல் ரச பேரின்ப கறுவே
கண்ணே நவ மணியே ஓம் என்

வேலாயுதன் துதி விண்ணே விளக்கியே
மூலா அத்வைத மூலக்கிடுஞ் சோதியே
ஓதினேன் நீதியே ஓம் என்

## விநாயகர் மீது.

இராகம் இங்கிலீஷ்மெட்டு — சுருட்டி திரிபுடை.

பல்லவி.

வேழ முகமும் ஐங்கரமும்
விளங்கு மங்குச பாசகரம்
மாமறைமிகு மங்கள வருவும்
மாதவ ரும்பர் துதிபதமும் — வேழ

## சுப்ரமண்யர் மீது.

ஆறுமுக மீராறுகரம்
அணிமயூர வேலழகும்
கூறு மடியார் வினைதீர்க்கும்
குன்றுருகவேல் ஜலமெடுக்கும் — மங்க

## சிவன் மீது.

வேணி யுறையும் நதி மதியும்
ஒளிர் திரு வக்கத கரி யுரியும்
பூணு மணியுஞ் செஞ் சடையும்
பிறக்கும் பலஉயிர் காப்பும் — மங்க

மங்கள முறைமுறை போற்றிடவே
மக்கள் சிரங்கரங் கூப்பிடவே
இங்கிதமா வேலாயுதன் பாடவே
இரங்கி யாசிர்பலந் தரவே. — மங்க

சுப்பிரமணியர்
தியானக் கீர்த்தனம்
முற்றிற்று.

## கையொப்பரேயர்கள்.

### ALIPORE CALCATTA.

P. Chinnah pillay
P. Ravanan pillay

### HASTING AKE ROAD.

R. V. Murugasam pillay
M. Veerasamy pillay
Munusamy pillay
Rajagopal pillay
M. Manickam pillay
Govidu pillay
R. Mastlamany pillay
Munusamy pillay.
Mr நன்னா, பெலவடிரோட்
Mr நாகர், பெல்வடிரோட்
C. L. ஜெகதாஸ் சிங்காரம் பிள்ளை

### சென்னை பிரம்பூரையடுத்த சிறுவள்ளூர்.

ஸ்ரீ கந்தசாமி நாயனர்
செ. ஆறுமுக கிராமணியார்
A. அப்பாவு முதலியார்
P. பெருமாள் கிராமணியார்
பெ. இராஜா கிராமணியார்
மு. தங்கவேலு முதலியார்
வ. தியாகராய முதலியார்
R V. ஞானமூர்த்தி நாயகர்.

நாகமல்லி-பார்த்தசாரதி நாயுடு
மேட்டுப்பாளையம்-தி. பிரபுலிங்க ஆசாரியர்

### அகரங்கிராமம்.

வ. இராகுவல் தாஸ்
இர. எத்திராஜலு தாஸ்
இர. கோவிந்தராஜ தாஸ்
பெ. இராகுப்பிள்ளை

### சிறுவள்ளூர்

மு. தனக்கோட்டி பிள்ளை
அ. அப்பாத்துரை பிள்ளை
பா. முருகப்பப்பிள்ளை
R. முருகேசம் பிள்ளை
R. V. இராஜரத்தின மூர்த்தி
R. V. கதிர்வேல் பிள்ளை
B, V. மாணிக்கம் பிள்ளை

புழல்கோட்டம்-ஆ. இராகுவல் தாஸ்.

சிறுவள்ளூர் பாக்ஸன் வீதி

அ. துரைசாமி பிள்ளை
மு. முருகேசன் பிள்ளை
மு. மாரிபிள்ளை
ஏ. மாணிக்கம் பிள்ளை
வ. வீரராகுவல் பிள்ளை
ஓட்டேரி பரசுராம பசுபதி

பிரம்பூர்

A. மாணிக்கம்பிள்ளை,
R. துளசிங்கம் பிள்ளை
R. V. ஜெகநாத சுவாமி
சீனிவாசம்பிள்ளை

செம்பரம்பாக்கம்.

சி. எத்திராஜலு கிளர்க்
பொ. சின்னப்பமேஸ்திரி
வி. ஜெகநாத பிள்ளை கிளர்க்

புரசை

தர்மீகர் வி. வி. திருவேங்கடப்பிள்ளை, வி. முனிசாமி பிள்ளை
பண்டிதர் மு. ஷண்முகம்பிள்ளை கிளர்க், அனந்தபாக்
அ. ஜோஷிய சைமன் பிள்ளை
முனிஸ்பாலிட்டி ராட்டர் தங்கவேல் முதலியார்

எழுமூர்

L. முருகேசம் பிள்ளை.

சிந்தாதிரிப்பேட்டை

அ. நாராயணசாமி பிள்ளை,

---

## பிரகடனம்.

கல்கத்தா அல்லிப்பூரின்கண்வசிக்கும்ம-ா-ா-ஸ்ரீ R V முருகேசமூர்த்தியிடத்திலும், மேற்படியூரில் வசிக்கும் ம-ா-ா-ஸ்ரீ P, இராவணன் பிள்ளை இடத்திலும் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

## விளம்பரம்.

சென்னை புரசை எம்நகரில் விளங்கும் ம-ா-ா-ஸ்ரீ தர்மீகர் V, V. திருவேங்கடப்பிள்ளையிடத்திலும், பிரப்புரைபடித்த சிறுவள்ளூர் மேட்டுப்பாளையம் இரங்கமா நாயுடு வீதிகண்ணுறையும் இந்நூலாசிரியர் இ. தொ. து. வேலாயுதமூர்த்திப் பண்டிதரிடத்திலும் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

---